## இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்:
இரா.கண்ணன், இ.ஆ.ப.,
கூடுதல் ஆணையர் (நிர்வாகம்)
சென்னை–34.

பெறுநர்:
இணை ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை
சேலம்

<u>ந.க.எண்.20701/2017/பி3/நாள்: 13.08.2021</u>

**பொருள்:** பணிப்பிரிவு – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.ஞா . ஞானேஸ்வரன் – இளநிலை உதவியாளர், இணை ஆணையர் அலுவலகம், சேலம் – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டது –தொடர்பாக.

**பார்வை:** அரசாணை எண் (2ப). 6 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை நாள். 07.07.2021.

*******

பார்வைக்குறிப்பின் மூலம் சேலம், இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.ஞா. ஞானேஸ்வரன் என்பவருக்கு, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை தனியரிடம் சார்வு செய்யும் பொருட்டும் , தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யும்பொருட்டும் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், அன்னாருக்கு தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்வது தொடர்பாக உரிய தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருப்பின், அன்னாரது தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்வது குறித்து உரிய செயற்குறிப்புகளை உடன் அனுப்பிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு : மேற்படி அரசாணை நகல்

ஒம்/– இரா.கண்ணன்
கூடுதல் ஆணையர்(நிர்வாகம்)

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர் 25.8.2021

25/8/2021

<u>நகல்</u>

2. திரு.ஞா.ஞானேஸ்வரன்,
இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை, சேலம்.

3.மிகை.

ADC(Admn)

ஆணையர் அலுவலகம்
- 9 JUL 2021
இந்து சமய அறநிலையத்துறை

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – திரு.ஞா.ஞானேஸ்வரன், இளநிலை உதவியாளர், இணை ஆணையர் அலுவலகம், சேலம் – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1) துறை</u>

அரசாணை (2ப) எண்.6

நாள்: 07.07.2021
பிலவ, ஆனி – 23
திருவள்ளுவராண்டு–2052

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை(நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு 1) துறை, நாள்.23.01.2020.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.20701/2017/பி3, நாள். 27.08.2020.
4. அரசாணை(நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு 1) துறை, நாள்.26.02.2021.
5. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.20701/2017/பி3, நாள். 03.05.2021.

******

<u>ஆணை:–</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறுவதிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது.

..2..

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் தொடர்பான ஒருங்கிணைந்த விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 02.02.2016 முதல் 31.12.2019 வரையுள்ள கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் (Guidelines) குறித்து ஆணையிடப்பட்டுள்ளது.

4. மேலே மூன்று மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், சேலம், செவ்வாய்ப்பேட்டை, அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி மாரியம்மன் திருக்கோயிலில், நிலை–2 செயல் அலுவலராகப் திரு.இரா.ஞானமணி அவர்கள் பணியாற்றியபோது 29.08.2014 அன்று காலமானார் எனவும், அன்னாரது மகன் திரு.ஞா.ஞானேஸ்வரன் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி விண்ணப்பித்ததன் அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 10.08.2017 பிற்பகல் முதல் சேலம், இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார் எனவும், திரு.ஞா.ஞானேஸ்வரன் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி விண்ணப்பிக்கும்போது இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்வதற்கு தேவையான வயது மற்றும் கல்வித்தகுதி பெற்றுள்ளார் எனவும், அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது எனவும், இந்து சமய அறநிலையத்துறையின் இளநிலை உதவியாளர்களுக்கு கருணையின் அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு நியமன அதிகாரி இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஆவார் என்றும், மேற்படி தனியர் திரு.ஞா.ஞானேஸ்வரன் என்பவருக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பான ஆணை மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசளவில் பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும், எனவே, திரு.ஞா.ஞானேஸ்வரன், இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 10.08.2017 பிற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், சேலம், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ஞா.ஞானேஸ்வரன் என்பவரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 10.08.2017 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாறு முன்நாளிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

..3..

7. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.10210/க்யூ.1/21–1, நாள் 29.06.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.19239/ஜி2/21, நாள் 05.07.2021–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திரு.ஞா.ஞானேஸ்வரன், இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் அலுவலகம், சேலம்.
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
நகல்:–
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், சேலம்.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை,
சென்னை–9
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை–9
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மைத் தனிச் செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. சித்யா
7.7.21
பிரிவு அலுவலர்.

07/07/21